**கவனிக்க.-** *11.11.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1733 - 2011 නොවැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2011.11.18

*1733 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1496 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1499 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2011, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## திருத்தம்

### நீதி அமைச்சு

மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் பதவி

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1712 ஆம் இலக்க 2011, யுன் மாதம் 24 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேற்கூறிய பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அவ்வறிவித்தலின் 7 ஆம் பிரிவின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது :-

> 7 ஆம் பிரிவின் "...................................... 2011.07.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்" என்பதை "2011.12.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்" எனத் திருத்தம் செய்யப்படுகிறது.

**குறிப்பு**.- முன்னர் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பித்தல் அவசியமாகாது.

சுகத கே. கமலத்,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12.
2011.10.28.

11-341

---

### நீதி அமைச்சு

அபிவிருத்தி உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்தல்

நீதி அமைச்சில் வெற்றிடமாகவுள்ள அபிவிருத்தி உதவியாளர் பதவி 1 இற்காக பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி ஒருவராக இருத்தல்.

2. **சம்பள அளவுத் திட்டம்**.- ரூபா 15,215-10X215-4X240-7X320-15X360-ரூபா 25,965 (எம்என்4) 2006ஏ

3. **வயது**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

4. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் மேல் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றனர்.

5. **சேவை நிபந்தனைகள்** :

(1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
(2) தாபனக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்க சேவையின் பொது நிபந்தனைகளுக்கும், இதுவரை வழங்கப்பட்டுள்ளதும் காலத்துக்குக்காலம் வழங்கப்படுவதுமான கட்டளைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்படுதல் வேண்டும்.
(3) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையிலான பிரிவுகளும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகள் I ஆம் தொகுதியின் VI ஆம் அத்தியாயத்தின் பிரிவுகளும் ஏற்புடையதாகின்றன.

6. **விண்ணப்பிக்கும் முறை**.- விண்ணப்பங்கள் 2011, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்பதுடன், அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :-

செயலாளர்,
நீதி அமைச்சு,
"மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி",
கொழும்பு 12.

சமர்ப்பிக்கவேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஏ4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்துக்கொண்டு விண்ணப்பங்களைத் தயார்செய்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "அபிவிருத்தி உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்களாயின் தமது நிறுவனத் தலைவரின் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின்போது தமது தகைமைகளை நிரூபிக்கும் அத்தாட்சிப்பத்திரங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். தபாலில் தொலைந்துவிட்ட விண்ணப்பங்களைப் பற்றி பொறுப்பெடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் உரியவாறு பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரத்தை அமைச்சின் செயலாளர் கொண்டுள்ளார்.

சுகத கமலத்,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2011, ஒற்றோபர் 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி அமைச்சு**

அபிவிருத்தி உதவியாளர் பதவி

(அலுவலக உபயோகத்துக்கு)

1. 1.1 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
   1.2 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
   1.4 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. தொலைபேசி இலக்கம் :----.

4. நேர்முகப் பரீட்சைக்காக அழைப்புக் கடிதம் அனுப்பவேண்டிய முகவரி (சிங்களத்தில்/ஆங்கிலத்தில்) :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

6. பிறந்த திகதி :----.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று வயது : ----.

8. ஆணா/பெண்ணா ? என்பது :----.

9. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

10. கல்வித் தகைமைகள் :----.

    பட்டம் :----.
    வகுப்பு :----.
    பல்கலைக்கழகம் :----.
    ஆண்டு :----.
    பாடங்கள் :----.

11. பிற தகைமைகள் :----.

12. தற்போதைய தொழில் சம்பந்தப்பட்ட விபரம் :-
    12.1 பதவி :----.
    12.2 பதவியில் நியமனம் பெற்ற திகதி :----.
    12.3 பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா ? :----.
    12.4 பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
    12.5 சேவைத்தலத்தின் முகவரி :----.

**விண்ணப்பதாரரின் உறுதியுரை**

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவை என்றும் இதில் உள்ள தகவல்களில் ஏதேனுமொரு தகவல் பொய்யானது மற்றும் தவறானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து அதன் காரணமாக நான் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் இப்பதவிக்கு நியமித்துக்கொண்டதன் பின்னர் தெரியவருமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்வமைச்சில்/திணைக்களத்தில் .................................. பதவியில் சேவை செய்யும் திரு./ திருமதி/ செல்வி ...................................... என்பவரின் விண்ணப்பத்தை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். இந்த அலுவலர் நிதி உதவியாளர் பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் அறிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை இடுக.)

திகதி :----.

11-365

---

**நீதி அமைச்சு**

நிதி உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்தல்

நீதி அமைச்சின் நிதி உதவியாளர் பதவிகளுக்காக ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் வர்த்தகவியல் அல்லது முகாமைத்துவ பட்டதாரி ஒருவராக இருத்தல்.

2. **பிற தகைமைகள்**.- அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் அலுவலர் ஒருவராக இருத்தல்.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- ரூபா 15,215-10X215-4X240-7X320-15X360-ரூபா 25,965 (எம்என்4) 2006ஏ.

4. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் மேல் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றனர்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
(2) தாபனக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்க சேவையின் பொது நிபந்தனைகளுக்கும், இதுவரை வழங்கப்பட்டுள்ளதும் காலத்துக்குக்காலம் வழங்கப்படுவதுமான கட்டளைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

(3) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையிலான பிரிவுகளும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகள் I ஆம் தொகுதியின் VI ஆம் அத்தியாயத்தின் பிரிவுகளும் ஏற்புடையதாகின்றன.

6. **பதவிக்குரிய கடமைகள்**.- நீதி அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களினதும் எல்லா நீதிமன்றங்களினதும் கணக்காய்வு அலுவல்களைச் செய்தல்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- விண்ணப்பங்கள் 2011, திசெம்பர் 10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்பதுடன், அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :-

செயலாளர்,
நீதி அமைச்சு,
"மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி",
கொழும்பு 12.

சமர்ப்பிக்கவேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஏ4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்துக்கொண்டு விண்ணப்பங்களைத் தயார்செய்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "நிதி உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத் தலைவரின் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின்போது தமது தகைமைகளை நிரூபிக்கும் அத்தாட்சிப்பத்திரங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். தபாலில் தொலைந்துவிட்ட விண்ணப்பங்களைப் பற்றி பொறுப்பெடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் உரியவாறு பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரத்தை அமைச்சின் செயலாளர் கொண்டுள்ளார்.

சுகத கமலத்,
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2011, ஒற்றோபர் 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி அமைச்சு**

நிதி உதவியாளர் பதவி

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்துக்கு)

1. 1.1 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

   1.2 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

   1.4 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. தொலைபேசி இலக்கம் :----.

4. நேர்முகப் பரீட்சைக்காக அழைப்புக் கடிதம் அனுப்பவேண்டிய முகவரி (சிங்களத்தில்/ஆங்கிலத்தில்) :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

6. பிறந்த திகதி :----.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று வயது : ----.

8. ஆணா/பெண்ணா ? என்பது :----.

9. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

10. கல்வித் தகைமைகள் :----.

    பட்டம் :----.
    வகுப்பு :----.
    ஆண்டு :----.
    பாடங்கள் :----.

11. பிற தகைமைகள் :----.

12. தற்போதைய தொழில் சம்பந்தப்பட்ட விபரம் :-
    12.1 பதவி :----.
    12.2 பதவியில் நியமனம் பெற்ற திகதி :----.
    12.3 பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா ? :----.
    12.4 பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
    12.5 சேவைத்தலத்தின் முகவரி :----.

**விண்ணப்பதாரரின் உறுதியுரை**

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என்றும் இதில் உள்ள தகவல்களில் ஏதேனுமொரு தகவல் பொய்யானது மற்றும் தவறானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து அதன் காரணமாக நான் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் இப்பதவிக்கு நியமித்துக்

கொண்டதன் பின்னர் தெரியவருமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்வமைச்சில்/திணைக்களத்தில் ................................... பதவியில் சேவை செய்யும் திரு./திருமதி/செல்வி ....................................... என்பவரின் விண்ணப்பத்தை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். இந்த அலுவலர் நிதி உதவியாளர் பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அறிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை இடுக.)

திகதி :----.

11-366

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தொழில் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் பதவி வகுப்பு III இற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011

தொழில் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் பதவி வகுப்பு III இற்கு சிங்கள மொழிமூலப் பதவிக்கு ஏழு (7) மற்றும் ஆங்கில மொழிமூலப் பதவிக்கு மூன்று (3) வெற்றிடங்களை நிரப்புவதன் பொருட்டு தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின்கீழுள்ள தேசிய தொழில் கல்வி நிறுவகத்தின் மூலம் நடாத்தப்படும் எழுத்து மற்றும் தொழில் ரீதியான பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக தகுதிபெற்றுள்ள பரீட்சார்த்திகளின் முன்னுரிமை ஒழுங்குமுறைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு நடைபெறும்.

3. **பதவிக்குரிய சம்பளத்திட்டம்**.- அரச நிருவாக சுற்றுநிருபம் 6/2006 (iv) க்கு ஏற்ப, எம்.என்-1-2006(ஏ) ரூபா 13,120-10X145-11X170-10X240-10X320-ரூபா 22,040 ஆகும்.

4. **சேவை நிபந்தனை** :

4.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியச் சம்பளத்துடனும் கூடியது. விதவைகள் அனாதைகள்/ தபுதாரர்கள் அனாதைகள் ஓய்வூதிய நிதிக்கு உதவுதொகை செலுத்தப்பட வேண்டும். நியமனம் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

4.2 2007.05.28 ஆந் திகதிய 7/2007 ஆம் அரச நிர்வாக சுற்றுநிருபத்திற்கு ஏற்ப சேவையில் சேர்ந்து ஐந்து (5) வருடங்களினுள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிமூலத்திற்கு மேலதிகமாக அரச கரும மொழி/அரச கரும மொழிகள் தொடர்பாக தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.3 கொழும்பு 5, நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் சேவையாற்ற வேண்டும்.

5. **தகைமைகள்** :

5.1 விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

5.2 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5.3 நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

5.4 கல்வித் தகைமைகள் :

(i) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் முதல் மொழி (சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்) மற்றும் கணிதம் உட்பட நான்கு (4) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(ii) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர) பரீட்சையில் (புதிய பாடவிதானத்தின்கீழ் சாதாரண பொது அறிவுப் பரீட்சை மற்றும் சாதாரண ஆங்கிலம் தவிர்ந்த) குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

5.5 தொழில் தகைமைகள்.- மூன்றாந்தர மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து மற்றும் கணனி தட்டெழுத்து தொடர்பாக ஆறு (6) மாத பாடநெறியொன்றினை விண்ணப்பிக்கும் மொழி மூலம் கற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு**.- சுருக்கெழுத்து மற்றும் கணனித் தட்டெழுத்து தொடர்பாக மூன்றாந்தர மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| தொழில்நுட்பக் கல்லூரி | - களுத்துறை |
| தொழில்நுட்பக் கல்லூரி | - மட்டக்களப்பு |
| தொழில்நுட்பக் கல்லூரி | - கட்டுகஸ் தோட்ட |
| தொழில்நுட்பக் கல்லூரி | - மொனறாகல |
| தொழில்நுட்பக் கல்லூரி | - யாழ்ப்பாணம் |
| தொழில்நுட்பக் கல்லூரி | - குளியாப்பிட்டி |
| தொழில்நுட்பக் கல்லூரி | - பெலியத்த |
| தொழில்நுட்பக் கல்லூரி | - அனுராதபுரம் |
| ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி | - அம்பாறை |
| தொழில்நுட்பக் கல்லூரி | - தெஹியத்த கண்டி |
| இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி | - ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 |

| | |
|---|---|
| கொலன்னாவ தொழில் பயிற்சி மத்திய நிலையம் | - கொலன்னாவ |
| தொழில்நுட்பக் கல்லூரி | - வவுனியா |
| தொழில்நுட்பக் கல்லூரி | - மதகம |

5.6 *அனுபவங்கள்.-* மேற்கூறிய கற்கைநெறியின்பின் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றில் ஆறு (6) மாத அனுபவப் பயிற்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை நடைமுறைகள்.-** இந்த ஆட்சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சையானது எழுத்துப் பரீட்சையொன்றினையும் தொழில் ரீதியான பரீட்சை ஒன்றினையும் உள்ளடக்கியுள்ளது. முதலில் எழுத்துப் பரீட்சை நடைபெறுவதுடன் அந்த வினாத்தாளில் 40% இற்கு கூடுதலான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் தொழில்ரீதியான பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். பரீட்சை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படுவதுடன் நீங்கள் விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| வினாத்தாள் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|
| ***எழுத்துப் பரீட்சை :*** | | |
| பொது அறிவு மற்றும் கட்டுரை எழுதுதல் | 2 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள் |
| ***தொழில் ரீதியான பரீட்சை :*** | | |
| விடயம் : சுருக்கெழுத்தும் கணனித் தட்டெழுத்தும் (சிங்களம்/ஆங்கிலம்) | | 100 புள்ளிகள் |

(i) *பொது அறிவும் கட்டுரை எழுதுதலும்.-* உள்நாட்டு மற்றும் சர்வதேச துறைகளில் காலத்திற்கு காலம் ஏற்பட்ட நிகழ்வுகள் தொடர்பான பொது அறிவினை பரீட்சித்தல். காலத்தின் முக்கியத்துவத்திற்கு அமைவாக தரப்பட்டுள்ள தலைப்புகளில் தேர்ந்தெடுத்த தலைப்பின்கீழ் கட்டுரை எழுதுதல் (மிகவும் விசேடமாக கருத்தினை சமர்ப்பித்தல், மொழித்தேர்ச்சி, இலக்கணப் பிழையின்மை மற்றும் சொற்களின் ஒழுங்குபடுத்துகைகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.)

(ii) (அ) சிங்கள சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (05) நிமிடத்தினுள் இடையறாது வாசிக்கக்கூடிய பந்தியொன்றினை நிமிடத்திற்கு 70 சொற்கள் என்ற வேகத்தில் சுருக்கக் குறிப்பெடுத்து அந்தக் குறிப்பினை ஒரு நிமிடத்திற்கு (07) சொற்கள் என்ற வேகத்தில் கணனியில் தட்டெழுத்துச் செய்தல்

அல்லது

(ஆ) ஆங்கில சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்.- ஐந்து (05) நிமிடத்தினுள் இடையறாது வாசிக்கக்கூடிய பந்தியொன்றினை நிமிடத்திற்கு 80 சொற்கள் என்ற வேகத்தில் சுருக்கக் குறிப்பெடுத்து அந்தக் குறிப்பினை ஒரு நிமிடத்திற்கு (07) சொற்கள் என்ற வேகத்தில் கணனியில் தட்டெழுத்துச் செய்தல்

7. **ஆட்சேர்க்கும் முறை.-** இந்தப் பரீட்சை போட்டிப் பரீட்சையாதலால், நியமனம் கிடைப்பதற்கு தகுதிபெறுவதன் பொருட்டு ஒவ்வொரு விடயம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக்குறைந்தது 40% இனை ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பெற்றுக்கொள்ள வேண்டும். போட்டிப் பரீட்சை தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும் வகையில் பெற்ற முழுப் புள்ளிகளின் ஒழுங்குகளைப் பின்பற்றுவதன் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும். (இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள எல்லாத் தகுதிகளும் நிறைவேற்றப்பட்டிருப்பது கட்டாயமானதாகும்.)

சிங்கள மொழி மூல வெற்றிடங்கள் சிங்கள மொழி மூல விண்ணப்பதாரிகளின் திறமை அடிப்படையிலும், ஆங்கில மொழி மூல வெற்றிடங்கள் ஆங்கில மொழி மூல விண்ணப்பதாரிகளின் திறமை அடிப்படையிலும் நிரப்பப்படும்.

8. **பரீட்சைக் கட்டணம்.-** இப்பரீட்சைக்கான கட்டணம் ரூபா 350 ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் தேசிய தொழில் கல்வி நிறுவனத்தின் பெயரிலுள்ள நுகேகொடை, இலங்கை வங்கிக் கிளையின் கணக்கு இலக்கமான 0071451995 இல் வைப்பிலிடப்பட்டு அதன் பொருட்டு வழங்கப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் கழன்று விடாதபடி ஒட்டி அனுப்புதல் வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணங்கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் போட்டோ பிரதி ஒன்றினை உங்கள் வசம் வைத்திருத்தல் பிரயோசனமானதாக இருக்கும்.

9. **விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் :**

9.1 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளின் அளவில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி,

(அ) இலக்கம் 1 இலிருந்து 3 வரையான பந்தி முதலாவது பக்கத்திலும் மிகுதி ஏனைய பக்கங்களிலும் வரக்கூடிய வகையில் தயாரிக்கப்படுவதுடன் உரிய விபரங்களைத் தனது கையினால் எழுதி தெளிவாகப் பூரணப்படுத்த வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தினை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்பட வேண்டும். உரிய மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப அமையாத, உரிய தினத்தில் பரீட்சைப் பணம் செலுத்தாத மற்றும் சரியாக பூரணப்படுத்தாத குறைபாடுகள் உடையதாகக் காணப்படும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தாததினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பாவார்கள். விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாக இருப்பதுடன், பூரணமாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காணப்படும் விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி களினால் விசாரணை செய்து பார்க்கப்பட வேண்டும். அப்படியில்லாதவிடத்து விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்பட முடியும்.

9.2 இப்பரீட்சை 2012 ஆம் ஆண்டு தை மாதம் கொழும்பில் மட்டுமே நடாத்தப்படும்.

9.3 அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் உள்ளதாக காண்பித்து, அந்த அறிவித்தலுக்கு ஏற்ப ஒழுங்குசெய்யப் பட்டுள்ள உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, உரிய தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முன் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளினால் உரிய தகைமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற முடிவின் அடிப்படையில், போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேசிய தொழில் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்குவது விண்ணப்ப தாரர் இந்தப் பதவியின் பொருட்டு தகுதியுடையவர் என ஏற்றுக்கொள்வதாக கருதப்பட மாட்டாது. விண்ணப்ப தாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப தகுதிகள் இருக்கின்றதா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில், தேவையான தகைமைகள் இல்லையெனக் கண்டறியப்பட்டால் அவரது பரீட்சார்த்தி தன்மை நீக்கப்படும்.

9.4 *விண்ணப்பப்படிவம் அனுப்பவேண்டிய முறை.*- பிழை களின்றி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2011.12.16 ஆந் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் "ஆணையாளர் நாயகம், தேசிய தொழில் கல்வி நிறுவகம், இல. 318, ஹை-லெவல் வீதி, கொழும்பு 6" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில் திணைக்களத்தின் சுருக்கெழுத்தாளர் பதவிக்கான ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2011" எனக் குறிப்பிடப்பட வேண்டும். தபாலில் தொலைந்துபோன அல்லது காலம் தாழ்த்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பாகப் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

9.5 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளில் அதிகாரி தரத்திலுள்ள அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர் அல்லது வருடாந்த சம்பளம் ரூபா 2,40,360 அல்லது அதற்குக் கூடிய அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

***மோசடியான தகவல்கள் தொடர்பான தண்டனை.***- விண்ணப்பப்படிவத்தினை நிரப்பும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப யாராவது ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவராகக் கண்டறியப்படுமிடத்து, பரீட்சைக்கு முன் அல்லது நடக்கும்போது அல்லது பரீட்சைக்குப் பின் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தி என்ற நிலைமையிலிருந்து நீக்கப்படுவார். நியமனக் கடிதம் கிடைத்தபின் அல்லது பொய்யான தகவல்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது என அல்லது சரியான தகவல்கள் மறைக்கப் பட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டால், அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- பரீட்சை நடைபெறும் தினத்திற்கு ஒரு கிழமைக்கு முன் கிடைக்கக்கூடியதாக பரீட்சை அனுமதி அட்டை தேசிய தொழில் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும். அவ்வனுமதி அட்டை இல்லாது பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திலுள்ள அதிகாரியிடம் கையெழுத்தினை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டு உடனடியாக அதுபற்றி குறிப்பிட்டு செய்தித்தாள்களில் அறிவித்தல் ஒன்று தேசிய தொழில் கல்வி நிறுவகத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு (2) அல்லது மூன்று (3) தினங்கள் கழிந்த பின்பும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அதுபற்றி தேசிய தொழில் கல்வி நிறுவகத்திற்கு அறியத்தர வேண்டும். உங்களிடமிருக்கும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டுப் பிரதி மற்றும் பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு உறுதிப்படுத்தப்பட்டு போட்டோ பிரதியொன்றுடனும் உங்களுடைய விசாரணையை தேசிய தொழில் கல்வி நிறுவகத்திற்கு அறியத்தருவது மேலும் வினைத்திறனுடையதாக இருக்கும்.

11. பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்துவது தொடர்பாக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. பரீட்சை நடாத்துவது தொடர்பாக தேசிய தொழில் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவார்கள். அந்த சட்டதிட்டங்களை மீறினால் தேசிய தொழில் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு, அவருக்கு ஆளாக நேரிடும்.

13. இந்தப் பரீட்சையை நடாத்துவது, நியமனம் வழங்குவது மற்றும் அனைத்து எல்லா விடயங்கள் தொடர்பாகவும் தொழில் ஆணையாளர் நாயகமே இறுதித் தீர்மானத்தை எடுப்பார்.

**குறிப்பு.**- சிங்கள/தமிழ்/ஆங்கில மொழிகள் மூலமான வர்த்தமானி அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படின், சிங்கள மொழி மூலமான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருப்ப வையே சரியானவை எனக் கொள்ளப்படும்.

வீ. பி. பீ. கே. வீரசிங்க,
தொழில் ஆணையாளர் நாயகம்.

தொழில் திணைக்களம்,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தொழில் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் பதவி வகுப்பு III இற்கான ஆட்சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சை - 2011**

**The Open Competitive Examination for the Recruitment to the Posts of Stenographer (Grade III) in the Department of Labour - 2011**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம்-1, ஆங்கிலம்-2

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக.)

1.

1.1 விண்ணப்பதாரருடைய பெயர் முதலெழுத்துடன் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :-----.
(உ-ம்) : PERERA, A.B.C.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

1.5 பால் : (பெண்/ஆண்) :

பெண்-1
ஆண்-0 ☐
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக.)

2.

2.1 நிரந்தர முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :-----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி :
(i) சிங்களத்தில்/தமிழில் :-----.
(ii) ஆங்கில பெரிய எழுத்துக்களில் :-----.

2.4 தொலைபேசி இலக்கம் :-----.

3.

3.1 விவாக அந்தஸ்து :
திருமணமானவர்-2, திருமணமாகாதவர்-1 ☐
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்.)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.4 நீர் இலங்கைப் பிரசையொருவராயின், பிறப்பினாலா ? பதிவு செய்யப்பட்டதனாலா ? :-----.

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. தரம்) பரீட்சை :

(1) பரீட்சை நடந்த வருடமும் மாதமும் : வருடம் :-----, மாதம் :-----.
(2) பரீட்சை சுட்டிலக்கம் :-----.
(3) பெறுபேறுகள் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

4.2 க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

(1) பரீட்சை நடந்த வருடமும் மாதமும் : வருடம் :-----, மாதம் :-----.
(2) பரீட்சை சுட்டிலக்கம் :-----.
(3) பெறுபேறுகள் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. தொழில் தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | கால எல்லை | நிறுவனம் |
|---|---|---|
| | | |

6. அனுபவங்கள் :

| பயிற்சிபெற்ற அல்லது சேவையாற்றிய நிறுவனத்தின் பெயர் | கால எல்லை |
|---|---|
| | |

7. நீர் எந்தவொரு குற்றத்திற்காகவும் நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டீரா ?

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

(உரிய கூட்டில் ✓ என அடையாளமிடுக.)

அவ்வாறு தண்டனை பெற்றிருந்தால் அது எந்தக் குற்றத்திற்காக, எந்த நீதிமன்றத்தினால் எத்தகைய தண்டனை கிடைத்தது என்ற விபரங்களைத் தரவும் :-----.

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

(1) பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளையின் பெயர் :-----.
(2) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் : இலக்கம் :-----. திகதி :-----.
(3) செலுத்திய தொகை :-----.

| பற்றுச்சீட்டை கவனமாகவும் முறையாகவும் இங்கே ஒட்டுக. |
|---|

9. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்தவரை உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதி கூறுகின்றேன். இதில் ஏதாவது விபரம் பூரணப்படுத்தப்படாமையினாலும் அல்லது தவறுதலாகப் பூரணப்படுத்தியமையினாலும் ஏற்படக்கூடிய நட்டத்தை ஏற்க உடன்படுகின்றேன். மேலும் எல்லா விபரங்களையும் சரியாகப் பூரணப்படுத்தியுள்ளேன் எனவும் உறுதி கூறுகின்றேன்.

(ஆ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக தொழில் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இந்த நிபந்தனைகளுக்கு அமைவாக நான் பொருத்தமற்றவர் என்பது கண்டறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ என்னுடைய பரீட்சார்த்தி தன்மை நீக்கப்படுவதற்கும் எடுக்கப்படும் முடிவினை ஏற்றுக்கொள்வதற்கும் நான் உடன்படுகின்றேன்.

(இ) இங்கு என்னால் செய்யப்பட்டுள்ள வெளிப்படுத்துகைகள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனம் கிடைப்பதற்கு பொருத்தமற்றவர் எனவும் நியமனம் கிடைத்த பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் என நான் அறிவேன்.

(ஈ) இங்கு குறிப்பிட்டுள்ள எந்த விபரங்களையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

10. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் :** இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................................ ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் ................................ என்னும் இடத்தில் எனது முன்னிலையில் அவருடைய கையொப்பத்தினை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தினை உறுதிப்படுத்தும்
அலுவலருடைய கையொப்பமும்
உத்தியோக முத்திரையும்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

11-565

---

## இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2011

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2011 மாச்சு மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கிறேன்.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் இலக்கம் 1225/32 கொண்ட 2002.03.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக இப்பாட விதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

பரீட்சை ஒழுங்குமுறைகள் :

(அ) முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட பாடங்கள் உள்ளடங்குகின்றன :-

| | |
|---|---|
| பாட இலக்கம் 1 | பொது நிர்வாகம்.- இலங்கை அரசியல் யாப்பு, தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள், அரசின் ஏனைய விதிமுறைகள் |
| பாட இலக்கம் 2 | நிதி |
| பாட இலக்கம் 3 | கல்வி, கல்விச்சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை |

(ஆ) உத்தியோகத்தருக்கு முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களுக்காக ஒரே தடவையில் அல்லது வெவ்வேறான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

(இ) ஒவ்வொரு வினாப்படிவங்களுக்குமான நேரம் மூன்று மணித்தியாலங்களாகும்.

3. **பாடவிதானம் :**

(1) பொது நிர்வாகம் :

(அ) இலங்கை (யாப்பு) அரச கட்டளை 1946 மற்றும் 1947 (973 ஆவது வாசகம்)

1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டம் (349 ஆவது வாசகம்)
1972 ஆம் ஆண்டின் மே 22 ஆந் திகதி விதித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பு
1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கம் கொண்ட வாக்காளர்களை பதிவுசெய்யும் சட்டம்
1981 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டம்
1981 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கருத்துக் கணிப்பீட்டுச் சட்டம்
1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான சட்டம்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு

(ஆ) அலுவலக மற்றும் துறைசார் ஒழுங்கமைப்பு திட்டம், தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் அரசின் ஏனைய ஒழுங்குவிதிகள்
தாபனவிதிக்கோவையின் வாசகங்கள்
I, II, III, IV, V, VI, VII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

(2) நிதி :

(அ) அரச நிதிப் பிரமாணத்தின் 1 ஆம் பகுதி (1 ஆவது வாசகத்தைத் தவிர)

(ஆ) நடைமுறை ஆண்டின் வருமானம் மற்றும் செலவின மதிப்பீடு (உ-ம்) அவற்றின் தயாரிப்புக்கள், வருமானத் தலைப்பு, நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்

(இ) கல்வி அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் கணக்குப் பணிகளுக்கு உரியதான கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டக் கொள்கைகள்

(3) கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை :

(அ) கல்விச் சட்டம் :
பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டங்கள் தொடர்பான அறிவு மற்றும் விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் :

* 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம்
* 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்தக் கட்டளைச் சட்டம்
* 1951 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க திருத்தச் சட்டம்
* 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க திருத்தச் சட்டம்
* அரச பாடசாலைகள் தொடர்பான பிரமாணக் குறிப்பு
* 1960 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள் திருத்தல்) சட்டம்
* 1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஒழுங்குவிதிகள்) சட்டம்
* 1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவிப்பெயரை மாற்றி அமைத்தல்) சட்டம்
* 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனாச் சட்டம்
* 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள்-திருத்தல்) சட்டம்
* 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்

(ஆ) கல்வி நிருவாகம் :

(1) கல்வி அமைச்சின் கொள்கைகள் :

(i) கல்வி அமைச்சு
(ii) மாவட்டத் திணைக்களம் உட்பட அமைச்சுக்களின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் கட்டமைப்பும் செயற்பாடுகளும்
(iii) தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கல்வித் திட்டமிடலின் நோக்கம், திட்டங்களை (பாடசாலைத் திட்டமிடல்கள் உட்பட) அமுல்படுத்தல் போன்றன

(2) பாடசாலை முகாமைத்துவம், பாடசாலை சமூக தொடர்பாடல்கள்
(3) கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை
(4) விசேட கல்வி வேலைத்திட்டங்கள்

(இ) கல்வி மேற்பார்வை :

* பாடசாலை மேற்பார்வைக்கான திட்டங்கள் மற்றும் ஆசிரியர்களின் செயற்சாதனை மதிப்பீட்டுக்காகப் பயன்படுத்தப்படும் அனுமானங்கள்
* பாடசாலையில் தொடர்ச்சியான மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள்
* பாடசாலைகளின் சுயமதிப்பீட்டு வேலைத் திட்டங்கள்
* மாவட்டம், திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சினால் பாடசாலை மேற்பார்வைகள்
* வெளிக்குழுக்கள் மூலம் உள்ளக மதிப்பீட்டு மேற்பார்வைகள்

(கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பாக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.)

பரிந்துரை செய்யப்பட்டுள்ள நூல்கள் மற்றும் வெளியீடுகள் :

* கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகம் தொடர்பான ஆசிய நிறுவனம் (1970)
* கல்வி நிர்வாகம் தொடர்பான முகாமைத்துவ கலைமுறைகள்
* கருத்தரங்கு அறிக்கைகள் - புதுடில்லி
* பரி மற்றும் டை (1975) பாடசாலையை நடாத்துதல்-டெம்பிள் ஸ்மித், லண்டன்

* புஷ் டீ கிளேட்டர், ஆர். குட் மற்றும் சீ றிசர்ஸ் (1980) பாடசாலை
* முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் காப்பர் மற்றும் றோ
* கலாநிதி கான் முகைதீன் செரீப் (1989)
* பாடசாலை நிர்வாகம் (புதுடில்லி)
* கல்வி அமைச்சின் இலங்கைக் கல்வி (1969)
* கல்வி மற்றும் கலாச்சார பணிகள் அமைச்சின் நூற்றாண்டுக் குழு II ஆவது மற்றும் III ஆவது பகுதி
* திறந்த பல்கலைக்கழகம் (1981) பாடசாலைகளின் கொள்கை வகுப்பு ஒழுங்குவிதிகள் மற்றும் தலைமைத் துவம் (ஈ 323 பாடநெறியின் 4 ஆவது பகுதி), திறந்த பல்கலைக்கழக யுனிவர்சிட்டி பிறஸ், லண்டன்
* சிப்மன், மார்டன் (1983) பாடசாலை மதிப்பீடு கய்ஸ்மன் கல்வி நூல் லண்டன், கல்வி அமைச்சின் முகாமைத் துவ மறுசீரமைப்புத் தொடர்பான அறிக்கை - 1984

4. சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடங்களில் 40% புள்ளிகள் வீதம் பரீட்சார்த்தியினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

5. **பரீட்சை மொழிமூலம் :**

(i) பரீட்சார்த்தி அரச கரும மொழி அல்லது தேசிய மொழி மூலம் பதிலளிக்க முடியும்.

(ii) பரீட்சார்த்தி அரச சேவையில் இணைந்துகொள்வதற்காக தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலமோ அல்லது போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவைக்கு இணைந்தவர்கள் தொடர்பாக அரச சேவைக்கு இணைவதற்கு தகைமைபெற்ற மொழி மூலமாகப் பதிலளிக்க வேண்டும்.

6. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியதாகத் தெரியவரும் பட்சத்தில் அவரின் பரீட்சார்த்தி தன்மை இரத்துச்செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழியைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

7. கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவு கடதாசியில் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 1 தொடக்கம் 6 வரையான வினாக்கள் 1 ஆம் பக்கத்திலும் எஞ்சியவை 2 ஆம் பக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.) சிங்கள விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழி மூலமும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். உரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகப் பூரணப்படுத்த வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் மற்றும் முறையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் போட்டோப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியால் விளக்கம் பெறவேண்டியதுடன் அன்றேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதனையும் கருத்திற்கொள்ளவும்.

8. பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளைப் பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சை தொடர்பான சட்டவொழுங்குகள் இவ்வறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. விண்ணப்பப்படிவம், 2011.12.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், ''பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு திணைக்களத் தலைவரினால் பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். இக்குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதியையும் உறுதிசெய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் அதனுடன் வைத்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;
(iv) விண்ணப்பப்படிவம் தபாலிட்ட திகதி, பதிவிலக்கம் மற்றும் தபால் அலுவலகம்.

11. மேலே (09) ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிவர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்தியால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

12. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்து வதற்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தியிடமிருந்து பரீட்சைக் கட்டணத்தை அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ''உரிய பரீட்சைக் கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வைப்புச் செய்யக்கூடியவாறு நாடெங்கும் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திலும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். (பற்றுச்சீட்டின் பிரதியைத் தாங்கள் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்)''.

(அ) முதல் தடவைக்கு (முழுமையான பரீட்சை அல்லது ஒரு பகுதிக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்காகவும்-

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக்காக | ரூ. 1,000 |
| ஒரு பாடத்திற்கு | ரூ. 500 |

14. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதாக கருத்திற்கொண்டல்ல என்பதனைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

எச். எம். குணசேகர,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2011.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2011**

First Efficiency Bar Examination For Officers in Class III of The Sri Lanka Education Administrative Service

(பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

(பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.)

1. (அ) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
உதாரணம் : SILVA, S. A :----.

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2. (i) அலுவலக முகவரி :----.
(ii) தனிப்பட்ட முகவரி :----.
(iii) பரீட்சை அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. அறிவித்தலின் (02) ஆவது வாசகத்தின் பிரிவு (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் தோற்றும் பாடங்கள் தொடர்பாக தெளிவாகக் குறிப்பிடவும்.

பாட இலக்கம் ☐☐ பாடம் :----.

பாட இலக்கம் ☐☐ பாடம் :----.

பாட இலக்கம் ☐☐ பாடம் :----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐

5. பிறந்த திகதி : ☐☐☐☐ ☐☐ ☐☐

6. (i) பதவிப்பெயர் :----.

(ii) திணைக்களம்/வலயக்கல்வி அலுவலகம்/கோட்டக்கல்வி அலுவலகம்/பாடசாலை :----.

7. இப்பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது பகுதியாகத் தோற்றியிருப்பின் அவ்வாறு தோற்றிய ஆண்டு, பாடம் மற்றும் மொழியைக் குறிப்பிடவும் :

| ஆண்டு | பாடம் | மொழிமூலம் |
|---|---|---|
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும் மேலே (06) ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரிமை உண்டென்றும் பரீட்சை தொடர்பான சகல சட்ட ஒழுங்குகளுக்கும் இணங்குவதாகவும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்குக் கட்டுப்படுவதாகவும் தெரிவிக்கிறேன்.

9. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :

பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டவும்.
(போட்டோ பிரதியை வைத்திருக்கவும். உரியதாயின் மாத்திரம்)

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கிறேன்.

இவ்விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ளதாகவும் 6 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமை பெற்றுள்ளதாகவும் இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளதாகவும் சான்றுபடுத்துகிறேன். (*)

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
பதவிப்பெயர், பதவி முத்திரை.

திகதி :----.

(*) கட்டணம் செலுத்த அவசியமற்றிருப்பின் இரத்துச் செய்யவும்.

11-571

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.